A/L DAY CLASS
(வார நாட்களில்)
Physics –
Mr நந்தகுமார் B. Sc
Chemistry –
Mr. Bar B. Sc.
Zoology –
Mr. ஈசன் B. Sc.
Botany –
Mr. கதிர்காமநாதன் B Sc.
Pure Maths.– App Maths
Mr. சந்திரமோகன் B.Sc
Bond INSTITUTION
58A. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அச்சாணை – நடு நிலைமை

கூடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ கார்த்திகை மீ 14 ஊ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 27 (30-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-3

A/L Day Class
இப்பொழுது
நடைபெறுகின்றன
8-15 — Physics
9-15 – Chemistry
10-30 — Zoology
10-30 — App Maths
11-30 – Botany
11-30 — Pure Maths
Bond INSTITUTION
58A. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தொண்டமானறு ஷெல் தாக்குதலில் முன்னாள் நகரபிதா மரணம்!

வல்வெட்டித்துறை, நவம்பர் 30

தொண்டமானறு இராணுவ முகாமில் இருந்து நேற்று, சுமார் மூன்று மணிநேரம் கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த ஷெல் தாக்குதலில் வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் பதில் தலைவரும், இளைப்பாறிய உதவித் தொழில் ஆணையாளருமான நல்லதம்பி மயில்வாகனம் (வயது 71) அவரது கெருடாவில் வீட்டில் நின்ற சமயம் ஷெல் விழுந்து துடி துடித்து மரணமானார்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் பதிலுக்கு மோட்டோ ஷெல் தாக்குதல் நடத்தியதன் விளைவாக இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை நிறுத்தினர்.

இராணுவ ஷெல் தாக்குதலில் 5 பொதுமக்கள் காயமுற்றனர்.

தொண்டமனறு இராணுவமுகாமுக்கு அருகில் உள்ள தமது வீடுகளில் இருந்து வெளியேறியவர்கள் தமது பொருள்களை எடுத்துச் சென்றசமயமே முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப் பட்டன.

உடுப்பிட்டியில் அகதிகளாக உள்ள பொதுமக்கள் நேற்றுக்காலை சுமார் பத்தரை மணியளவில் தொண்டமனறில் உள்ள தமது வீடுகளிலிருந்து பொருள்களை எடுப்பதற்காக அங்கு சென்றனர்.

அப்போது இராணுவ முகாமில் இருந்து எதிர் பாராதவிதமாக பொதுமக்கள் நடமாடிய தொண்டமனறு மகா வித்தியாலயப் பக்கமாக மோட்டோ ஷெல் அடிக்கப்பட்டது. பயத்தினால் பொதுமக்கள் உடுப்பிட்டி வீதியை நோக்கி ஓடினர்.

ஷெல் தாக்குதலால் இறந்தவரது சடலத்தை விடுதலைப்புலிகள் பலத்த கவ்டங்களின் மத்தியில், உடுப்பிட்டியில் அவரது குடும்பத்தினர் தற்காலிகமாகத் தங்கி இருக்கும் வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

காயமடைந்த பொதுமக்களையும் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுவந்து சேர்த்து சிகிச்சை வசதிகளுமளித்தனர். (அ–10)

ஓமந்தையில் தாக்குதல்!

9 சிப்பாய்கள் பலி!!

யாழ்ப்பாணம், நவ. 30

கூடந்த வியாழனன்று ஓமந்தை முகாமுக்கு அருகே ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினர் கோன் சார்ஜ் தாக்குதலும், நேரடி மோட்டார் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், 6 பேர் படுகாயமடைந்தனர். ஜீப் வண்டி முற்றுமுழுதாகச் சேதமாக்கப்பட்டது.

இப்படி ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

இத் தாக்குதலின்போது தமது தரப்பில் எவ்வித சேதமுமில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

நகரில் ஷெல் தாக்குதல்

சிறுவன் காயம்

3 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்நகரை நோக்கி நேற்று கோட்டையில் இருந்து மீண்டும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் சிறுவன் ஒருவன் காயமடைந்தான். மூன்று வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுப் பகல் ஒரு மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

கொட்டடிப் பகுதியில் விழுந்து வெடித்த இந்த ஷெல் குண்டுகளினால் மூன்று வீடுகள் சேதமடைந்தன. நமசிவாயம் சிவானந்தராசா (7 வயது) என்ற சிறுவனே படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது இடுப்பை ஷெல் குண்டுகள் தாக்கியுள்ளன. நமசிவாயம் மகாவித்தியாலயத்தில் இரண்டாம் வகுப்பில் இம்மாணவன் கல்வி பயின்று வருகிறார். (இ–10)

போராளிகள் தாக்கி ஹொறவப்பொத்தானையில்

2 பொலீஸார் பலி! 7 பேர் காயம்!!

வவுனியா, நவ. 30

போராளிகள் தாக்கியதில் இரண்டு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் அந்த இடத்திலேயே கொல்லப் பட்டனர்.

இன்ஸ்பெக்டர் ஒருவர், சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஏழு பொலீஸார் படுகாயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் சிங்களப் பகுதியான தியசிற்றி வேவா என்னும் இடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

ஹொறவப்பொத்தானை பிரதேசத்தில் வவுனியா — ஹொறவப்பொத்தானை வீதியில் இக் கிராமம் உள்ளது.

ரோந்து சென்ற பொலீஸ் வாகனம் ஒன்றையே போராளிகள் பதுங்கி இருந்து தாக்கினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போராளிகள் தரப்பில் இடம்பெற்ற சேதம் பற்றி விபரங்கள் தெரியவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–எ–1)

மதுரையில் ரயில் பாதையில் குண்டுவெடிப்பு

மதுரை, நவ.29

மதுரைக்கருகே ரயில் பாதையில் இன்று அதிகாலை அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் ஒரு மீட்டர் அகலத்திற்கும் ஆழத்திற்கும் குழி ஏற்பட்டது.

குண்டு வெடிப்பு காரணமாக தென் பகுதிக்குச் செல்லவிருந்த ரயில்கள் வேறு பாதையால் திருப்பப்பட்டன.

பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (இ–ஒ)

படையினர் அட்டகாசம்

திருக்கோவிலில்

3 தமிழர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, நவ, 30

திருக்கோவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆயுத படையினர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில்மூன்று தமிழர் உயிரிழந்தனர்

உயிரிழந்த இரண்டு இளைஞர்களின் சடலங்களைப் படையினர் அக்கரைப்பற்று முகாமுக்கு எடுத்துச் சென்றனர்.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் ஆற்றுக்குள்ளே இடந்தது. அதை மீட்கும்வேலையில் ஊர்மக்கள் நேற்றுமாலை வரை ஈடுபட்டு இருந்தனர்.

40 தமிழர் விசாரணைக்காக படையினரால் கைதுசெய்யப்பட்டு அக்கரைப்பற்று முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உ–எ–21)

தம்புலுவிலில் நிலக்கண்ணி!

5 சிப்பாய்கள் பலி!!

யாழ்ப்பாணம், நவ. 30

திருக்கோயிலில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி ரோந்து சென்ற படையினர் மீது தம்புலுவில் என்ற இடத்தில் புலிகள் நிலக்கண்ணி வெடிவைத்துத் தாக்கியதில் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஜீப் ஒன்று முற்றுமுழுதாகச் சேதமுற்றது.

இந்தச் சம்பவம் வெள்ளிமாலை 4-30 மணியளவில் நடைபெற்றதாக புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ–எ–21)

கிராமசேவகரின் மோட்டார்சைக்கிளை எடுத்துச் சென்ற சிப்பாய்கள்

வல்வெட்டித்துறை, நவ. 30

கிராம சேவகரின் ஹொண்டா மோட்டார் சைக்கிளை சிப்பாய்கள் எடுத்துச் சென்றனர்.

இச் சம்பவம் நேற்று தொண்டமனற்றில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:–

நேற்றுக்காலை தொண்டமனற்றில் உள்ள தமது வீட்டுக்கு லாண்ட்மாஸ்டர் சகிதம் சென்றிருந்தார் பிரஸ்தாப கிராம சேவகர்.

தமது வீட்டில் உள்ள பொருள்களை லாண்ட் மாஸ்டரில் ஏற்றிச் செல்லவே கிராமசேவகர் குடும்பத்துடன் வந்திருந்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

மண்மூடைகளுக்குப் பின் கொங்கிறீற் சுவர்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ் கே கே. எஸ். வீதியில் கி.எஸ் கே. மில்லுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள மண்மூடை அரணுக்குப் பின்னால் கொங்கிறீட் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளே இப் பாதுகாப்புச் சுவரைக் கட்டி வருகின்றனர். வீதியின் குறுக்கே ஆறு அடி உயரத்திற்குச் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

மழை காலம் ஆரம்பமாகி விட்டதால் மண்மூடைச் சாக்குகள் உக்கி சேதமடைந்துள்ளன.

இதனை அடுத்தே மேலதிக பாதுகாப்புக் கருதி சுவர் கட்டப்பட்டு வருகிறது.

ஏற்கனவே பல வீதிகள் புலிகளினால் பழைய வாகனங்கள், மண்மூடைகள் தார்ப் பீப்பாக்கள் கொண்டு தடுக்கப்பட்டுள்ளன (இ–10)

பயங்கரவாத வழக்கில் நீதிமன்றம் கலையும்வரை சிறைத்தண்டனை விதிப்பு

கொழும்பு, நவ. 30

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் எதிரியான தமிழர் ஒருவருக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

நிலாவெளியைச் சேர்ந்த ஆர். கணேசசுந்தரம் என்பவர் மொறி உரிமையாளர்.

அரசாங்கத்தால் தேடப்பட்ட ஈழத்து நாதன், தணிகாசலம், புவிராஜன், நாகேந்திரா ஆகியோரைத் தெரிந்திருந்து தகவல் கொடுக்கத் தவறினர் எனக் குற்றஞ் சாட்டி கணேசசுந்தரம் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஈழத்துநாதன், நாகேந்திரா ஆகியோர் மீது அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்குகளில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார் என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி

(4–ம் பக்கம் பார்க்க)

தமிழர் தாயகம் தவிர்ந்த தீர்வு தமிழரைத் திருப்திப்படுத்தாது

தென்னிந்தியப் பிரமுகர் டில்லிக்கு மகஜர்

பெங்களூர், நவ. 29

முழு இறைமை கொண்ட தமிழர் தாயகம் தவிர வேறு எந்தத் தீர்வும் இலங்கைத் தமிழரைத் திருப்திபடுத்தமாட்டாது என்று இந்திய அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தீவிரவாத, மிதவாத அமைப்புக்களுக்கு ஆதரவான தென்னிந்தியத் தமிழ்ப் பிரமுகர்கள் கூட்டாக இந்த மகஜரை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர்

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

* இந்திய இராணுவம் உடனடியாகத் தலையிட்டு இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற வேண்டும்.
* இந்திய ராவின் நலன்களுக்கு எதிரான சக்திகளான அமெரிக்கா, இஸ்ரவேல், தென்ஆபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இலங்கையுடன் கூட்டுச்சேர்ந்துள்ளன இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகஉள்ளது. இலங்கையின் தனித் தமிழ் ஈழம் உருவாவதே இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

இப்படி வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியத்தமிழ்ப் பிரமுகர்கள் பெங்களூரில் கூடி எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்தே மேற்கண்டவேண்டுகோள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் திரு. எஸ். சி. சந்திரகாசன், திரு. ஈழவேந்தன், சற்றர்டே

(4ஆம் பக்கம் பார்க்க)

தீர்வுக்கான பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கும் பங்கு வேண்டும்

கொழும்பு, நவ 30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை–இந்திய தமிழர் அமைப்புக்களுக்கிடையேயான பேச்சுக்களில் முஸ்லிம்களும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இப்படி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம் நேற்று நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

* இலங்கை அரசு இஸ்ரவேலுடன் இரகசிய தொடர்புகளை வைத்துள்ளதை காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.
* ஈரான் - ஈராக் சண்டைக்கு சமாதான தீர்வு காணப்பட வேண்டும்.
* இஸ்லாய [illegible] மாற்ற அரசு எடுக்கும் முயற்சிகளை காங்கிரஸ் கண்டிக்கிறது. (ஏ–14)

நத்தார் புதுவருட விசேஷ வாய்ப்பு

மாபெரும்
மலிவு விற்பனை

டிசெம்பர் மாதம்
1ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை

● ஆண்கள் ● பெண்கள்
● சிறுவர்களுக்கு

உகந்த சிறந்த துணிவகைகளுக்கும்
தைக்கப்பட்ட உடைகளுக்கும்
மற்றும்
லடன் தயாரிப்புகளுக்கும்
உடன் நாடுங்கள்

லடன் காமென்ஸ்
235, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச்சந்தி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல, 23603

சுபநேரம்

30—11—1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்: [illegible]
9.14 முதல் 10.44 வரை
ராகுகாலம்:
4.44 முதல் 6.14 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குக் [illegible]ழை உவை போடுற வழக்கு எல்லாம் உப்பிடித்தான் இருக்கும். பேருக்குப் போடுற வழக்குகள் தானே...!

Important Notice
TO
OUR CUSTOMERS

We are pleased to inform you that for your convenience, from today onwards the items that are sold at our Sales Centre at Hospital Road will be sold at our Workshop at No. 17 Chemmany Road, Nallur as well.
Location:-

Fifty yards from Muthiraisanthi and opposite to Kachcheri - Nallur Road and Chemmany Road Junction.

Samuel Sons
& Co. Ltd,.
Hospital Road,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பஸ் நிலையத்தில் பொது மலசலகூடம்

கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ் பஸ்நிலைய பொது மலசலகூட கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி வீ கே. சிவஞானம் இதனைத் தெரிவித்தார்

சென்ற வருடம் இதற்கான இட அனுமதியை வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் பெற்று அத்திவார வேலைகள் ஆரம்பமாகி இருந்தன.

அமைச்சிடமிருந்து வந்த தடையுத்தரவால் வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

ஆணையாளர் இது சம்பந்தமாக கொழும்பு சென்று அமைச்சரை சந்தித்து இதற்கான அனுமதிபைப் பெற்றுவந்துள்ளார்.

ஒன்றரை லட்சம் ரூபா செலவில் இப்பொது மலசல கூடம் கட்டப்படவுள்ளது.

(இ-5)

மல்லாகம் டிப்போ மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 30

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மல்லாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலைத்தலம் மீண்டும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இயங்கத் தொடங்கும்.

பல்களுக்கான உடற் கோப்பு வேலைகளும், சீற் வேலைகளும் மற்றும் பிரதான என்ஜின் வேலைகளும் இங்கு மீண்டும் மேற்கொள்ளப்படும் என வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரட்னம் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு நிலைமை வழமைக்குத் திரும்புமானால் மேலும் பல புதிய பஸ்களை வட

(4-ஆம் பக்கம்பார்க்க)

செய்திக்கொத்து

ஆபாச படக் கொப்பிகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், நவ. 30

மினிசினிமா ஒன்றியத்தின் கண்காணிப்புப் பிரிவினரால் சமீபத்தில் யாழ்- நகரில் ஆபாசப் படக் கொப்பிகள் கைப் பற்றப்பட்டன.

இதில் சம்பந்தப்பட்ட ஒருவர் அப்படங்களை வாடகைக்கு கொடுத்து வந்தார் என்றும் அவரை இனங்கண்டு கொப்பிகளைப் பறிமுதல் செய்ததோடு அபராதமும் விதிக்கப்பட்டது என்றும் மினிசினிமா ஒன்றியத்தின் கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

(இ-10)

புதிய அலுவலகம்

ஊர்காவற்றுறை, நவ.30

காரைநகர் வடக்கு அபிவிருத்திச்சபை உப அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்பட வுள்ளது

இதற்கான நிதியை யாழ் மாட்ட அரசாங்க அதிபர் ஒதுக்கியுள்ளார்.

(இ-16)

யாழ் இந்துவில் சித்திர கண்காட்சி

பலாலி, நவ 30

பள்ளிச் சிறுவர்களின் கைவண்ணத்தில் அமைந்த யாழ் மாவட்டப் பாடசாலைகளின் சித்திரக் கண்காட்சி யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை 1 ஆம் திகதியில் இருந்து 3 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு தினசரி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் நடைபெறவுள்ள இக்கண்காட்சியை யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் திறந்து வைப்பார்.

(இ-119)

வீதிகள் திருத்தம்

சுன்னாகம், நவ.30

சுன்னாகம் சந்தையைச் சுற்றியுள்ள வீதிகளிலும் புத்தூர்- கந்தரோடை வீதியிலும் திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு சுன்னாகம் பிரசைகள் குழு செய்த மூறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தையைச் சுற்றிய தெருக்களின் திருத்த வேலைகளை அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி திரு. எஸ். கந்தசாமி துரிதப்படுத்தியுள்ளார்.

(இ-27)

விசாரணையின் பின் விடுதலை

முள்ளியவளை, நவ.30

முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை பகுதிகளிலிருந்து முல்லைத்தீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களுள் 10 பேரைத் தவிர ஏனையோர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

(இ-93)

இன்றைய நிகழ்ச்சிகள்

கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ .30

'மல்லிகைப் பந்தலின்' மற்றுமொரு வெளியீடான கவிஞர் வாசு தேவனின் 'என்னில் விழும் நான்' கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

கம்பன் கழக இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கவிஞர் இ. சிவானந்தன், கவிஞர் சோ. பத்மநாதன், திரு. இரா. சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள்.

டொமினிக் ஜீவா வரவேற்புரையும், கவிஞர் வாசுதேவா நன்றியுரையும் வழங்குவார்கள்

(இ-5)

கலை இலக்கிய களத்தினரின் கலை விருந்து

யாழ்ப்பாணம் நவ 30

கலை இலக்கியக் களத்தினரின் நான்காவது கலை விருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

திரு. க. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை திரு. சி. சிவமகாராசா தொடக்கி வைப்பார்.

செல்வி அபிராமி புவனேந்திரனின் நடனமும், செல்வி. ஏ. வசந்தரூபி; செல்வன் பா. பாலநந்தகுமார், திரு. எஸ். உருத்திரேஸ்வரன், திரு. இ. சிவானந்தன், கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோரின் தனி நடிப்புகளும், செவ்விகளும் இடம்பெறும்

(இ-5)

பாடசாலை அபி. சங்க பொதுக் கூட்டம்

அச்சுவேலி, நவ. 30

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. ஏ. விக்கினராசா தலைமை வகிப்பார்.

(இ-11)

விமர்சன அரங்கு

ஊர்காவற்றுறை, நவ 30

அரசியல் தத்துவார்த்த பத்திரிகையான ''பொதுமை'' என்ற மாதாந்த இதழின் விமர்சன அரங்கொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி அளவில் கரம்பன் புஸ்பமகளிர் பாடசாலையில் நடைபெறும்.

(இ-16)

கிராமிய நீதிமன்ற அமைப்புக் கூட்டம்

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த புளியங்கூடல், சுருவில், சூராவத்தை ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசத்திற்கான கிராமிய நீதிமன்ற அமைப்புக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடலில் நடைபெறும்.

(இ-16)

நுளம்புக்கு மலத்தியன்

புங்குடுதீவு, நவ.30

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் நுளம்புத் தொல்லையை நீக்கும் பொருட்டு வீடுகள் தோறும் மலத்தியன் மருந்து தெளிக்கும் வேலை விரைவில் ஆரம்பமாகும்.

இதற்கான ஏற்பாடுகளை மலேரியாத் தடுப்பு இயக்கத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

(இ-10)

பிரயாண ஒழுங்குகள்

★ லண்டன்
★ ஜேர்மனி
★ சவூதி
★ குவைத்

லண்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்பும் ஆண், பெண் இருபாலாரையும் எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதிக்கும் குவைத் கிளீனர்ஸ் ஆகவும் செல்லலாம். செல்ல விரும்புவோர் உடன் பாஸ் போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடரிபு:
N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* இவ்பகுதி மக்களின் நலன கருதி ஒமேகா ரவல்ஸ்ரூர்ன் வங்களாவடி சந்தியில் நிறுவப் பட்டுள்ளது.

* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பினான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது

[31 ஆம் நாள் நினைவஞ்சலி]



திரு. சிற்றம்பலம் சுப்பிரமணியம்
(லண்டன்)

தோற்றம் 29 – 2 – 1916. மறைவு 31 – 10 – 1986.

அன்பின் திருவுருவாய்,
சைவத்தின் கடறொளியாய்
ஈகையில் இணையற்று விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே,
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்.
சு. ஸ்ரீ புருஷோத்தமன்,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நயினைதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
வழிபடுநர் சபை - 1987

மேற்படி கோவிலுக்கு 1987 ஆம் ஆண்டிற்கான வழிபடுநர்சபை உறுப்பினர்களாகச் சேர விரும்பும் அல்லது அங்கத்துவத்தை புதுப்பிக்க விரும்பும் கீற்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநரும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை 'பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினைதீவு' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று கீழே காணப்படும் படிவங்களில் தமக்கு ஏற்புடையதான படிவத்தில் அமைந்த விண்ணப்பங்களுடன் சேர்த்து 1986 ஆம் ஆண்டு மார்கழிமாதம் முப்பத்தோராந் (31) திகதி மாலை ஐந்து மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக 'செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினைதீவு' என்ற முகவரியிட்டு கடிதமூலம் அனுப்புமாறும் அல்லது கோவில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழிபடுநர்சபை உறுப்புரிமை விண்ணப்பம்" எனக் குறிக்கப்படல் வேண்டும்

வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:-

1. (அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதிற்கு மேற்பட்ட வராகவும்,
   (ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்,
   (இ) நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநராகவும்,
   (ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகைமையுடையவர் ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்,

2. (அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் நிஜம் நடைபெறும் நான்கு கால நித்திய பூசை ஒன்றில் உபயகாரராக இருப்பாராயின் அல்லது,
   (ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட எந்தவொரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றில் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும், மேற்கூறிய நித்திய, விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள் மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரை 2 (அ) அல்லது (ஆ) கூறினின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயதுவந்த ஒருவரை தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக நியமிக்க உரித்துடையவராவர்.

   அப்படி உறுப்புரை 2 (அ) அல்லது (ஆ) வின் கூற்றுப்படி அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/-) செலுத்தலாம்.

   மேற்கூறிய உறுப்புரை (அ) அல்லது (ஆ) வின் படி தகைமையற்றவர்கள்.

   (இ) தனது விண்ணப்பப் படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/-) 'பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினைதீவு' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.

3. அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும்,
4. இக் கோவிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகளைப் பெறுத ஒருவராகவும்,
5. இக் கோவிலில் லாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

முதலாவது அட்டவணை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினைதீவு வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
2. பிறந்த திகதி:-
3. இந்துவா?:-
4. நீர் நயினைதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநரா?:-
5. வாசகம் 2 (அ) அல்லது (ஆ) வின் பிரகாரம் உறுப்புரிமைக்குத் தகுதியுடையவராயின் தயவுசெய்து இவ்வாண்டு கோவிலுக்குச் செலுத்திய பணத்திற்கு வழங்கிய பற்றுச்சீட்டின் விபரங்களைத் தரவும்:

பற்றுச்சீட்டின் திகதி	பற்றுச்சீட்டின் தொடரிலக்கம்	செலுத்திய தொகை	எந்தப் பூசைக்கு அல்லது உற்சவத்திற்கு பணம் செலுத்தப்பட்டதோ அதன் விபரம்

6. இலங்கையில் முகவரி:-
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/அஞ்சற்கட்டளை பற்றிய விபரம்:

காசுக்கட்டளை/அ. க. தொடரிலக்கம்	வழங்கிய அஞ்சலகமும் திகதியும்	தொகை

8. நீர் ஏதாவது குற்றத்தின் பேரில் நீதிமன்றமெதிலாவது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டீரா? அப்படியாயின் வழக்கு இல. முதலியவற்றுடன் முழுவிபரங்களையும் தருக.
9. நீர் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவு பெறும் கோவில் ஊழியரா அல்லது குருக்களா?
10. நீர் கோவிலுடன் ஒப்பந்தமேதாவது மேற்கொண்டுள்ளீரா? அவ்வாருயின் முழுவிபரங்களையும் தருக:

எனக்கு நன்கு தெரிந்த வரையிலும் நான் நன்கு நம்புகின்றவரைக்கும், மேலேயுள்ள விபரங்கள் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துகின்றேன். நான் இத்தால் வழிபடுநர்சபையின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ளவை இதிற் சொல்லப்பட்டுள்ள விண்ணப்பகாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. அவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவராவர். அவர் இவற்றை விளங்கிக்கொண்டு என் முன்னிலையில் 19.....மாதம்..... ஆந் தேதியாகிய இன்று..... கையொப்பமிட்டார்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்

என் முன்பாக
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

இரண்டாவது அட்டவணை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினைதீவு வழிபடுநர்சபை உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

செயலாளர்,
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில்,
நயினைதீவு.

வழிபடுநர்சபைச் சந்தாவைப் புதுப்பித்தல்

அன்புடையீர்,

19.....ஜனவரி முதலாம் தேதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டுக்கான எனது வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பிப்பதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன். .....எனும் இலக்கத்தைக் கொண்டதும் ரூபா.....க்கு.....தபால் அலுவலகத்தால் வழங்கப்பட்டதுமான காசுக்கட்டளை / தபால் அஞ்சற் கட்டளை இத்துடன் இணைக்கப்படுகின்றது. வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கு ஏற்புடைத்தான எல்லாத்தகைமைகளையும் தொடர்ந்து பெற்றிருக்கிறேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ளவை இதில் சொல்லப்பட்டுள்ள விண்ணப்பகாரருக்கு வாசித்து விளக்கப்பட்டன. அவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவராவார். அவர் இவற்றை விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் 19.....மாதம்..... .....ம் தேதியாகிய இன்று கையொப்பமிட்டார்.

உறுப்பினரின் கையொப்பம்.

என் முன்பாக
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பகாரரின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இந்துமதகுரு, இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினைதீவு.

க. கனகசபாபதி,
செயலாளர்,
அறங்காவலர் சபை.

உதய சங்கற்பம்

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாய் இருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாய் இருக்கிறது.

—பைபிள்.

உதயன்
உண்மை - நிதானம் - துணிவு

இல.15 2ஆவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2480 2207
30-11-1986 த பெ இல 23

இலங்கையின் இனிய நண்பன்!

இலங்கை அரசாங்கம் இஸ்ரவேலுடன் வைத்திருக்கும் தொடர்புகள் குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா காரசாரமாக விமர்சித்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் குறித்தும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி பதவிக்கு வந்தால் கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தில் இயங்கும் இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவு 24 மணி நேரத்தில் மூடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரவேல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உறுப்புகளில் ஒன்று. அடி வருடிகளில் ஒன்று.

அரபு நாடுகளை — முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் இஸ்ரவேல் ஒரு ஸியோனிஸ்ட். அரபு மக்களின், குறிப்பாக பலஸ்தீனியரின் தாயகத்தைப் பறித்தது மட்டுமல்லாமல் அவர்களை அங்கிருந்து விரட்டி அடித்தும் விட்டது இஸ்ரவேல்.

அதன் காரணமாக இஸ்ரவேலை அரபு மக்களுக்குக் கண்ணில் காட்ட இயலாது. இஸ்ரவேலியர்களை அவர்கள் எஹூதிகள் என்றே அழைப்பர். அதே போல இஸ்ரவேல் என்ற சுதந்திரக் கட்சிக்கும் பரம வைரி போன்றதாகி விட்டது. அது வேறு விடயம்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் ஸ்ரீலங்கா அரசாங்கங்களும், அவற்றின் பேரினவாதமும் இஸ்ரவேலுக்குச் சரிசமமானவை.

தமிழர் தாயகத்தை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஸ்ரீலங்கா அரசுகள் பறித்து வைத்திருக்கின்றன. தமிழர்களை அப்பகுதிகளில் இருந்து, குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இருந்து விரட்டியும் விட்டன.

அந்தத் துணிவில் இப்போது கிழக்கில் சிங்களவருக்கு ஒன்றும் தமிழர்களுக்கு ஒன்றும், முஸ்லிகளுக்கு ஒன்றுமாக மூன்று மாகாண சபைகளை வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது!

அவர்களின் சாதனைதான் என்னே! இஸ்ரவேலையும் இலங்கையையும் ஒரே வரிசையில் வைத்துப் பார்ப்பதற்கு, ஒரே தட்டில் வைத்து நிறுப்பதற்கு அந்தச் சாதனை ஒன்றே போதும். அவை இரண்டும் தூரத்தால் தொலைவில் இருந்தாலும் கொள்கையிலும், செயலிலும் நண்பர்கள்.

ஆனாலும் இஸ்ரவேலுடனான உறவை இப்போதைய இலங்கை அரசு ஒளிவு மறைவாக வைத்திருக்கிறது. வெளிப்படையாக நட்பு வைத்துக் கொண்டால் அரபு நாடுகளிடம் இருந்து கிடைக்கும் உதவிகள் கெட்டு விடும் என்ற பயமே அதற்குக் காரணம்.

அந்த ஒளிவு மறைவின் ஒரு நாடகம் தான் இஸ்ரவேல் ஜனாதிபதியின் இலங்கை விஜயம். அது திடீர் விஜயமோ திட்டமிடப்பட்ட வருகையோ என்பது விவாதத்துக்கு உரியதல்ல.

ரஷ்யத் தலைவர் திரு. கோர்பச்சேவ் இந்தியாவுக்கு வருகை தர இருந்த வேளை, இஸ்ரவேல் ஜனாதிபதி இங்கு வந்தமை இரு நாடுகளுக்கும் இடையேயான இரகசிய உறவை மேலும் சந்தேகிக்க வைத்துள்ளது. அவர்கள் இனிய நண்பர்கள் என்பதை மேலும் ஊர்ஜிதப்படுத்தி இருக்கிறது.

ஏற்கனவே அமெரிக்க ஆயுதங்கள் பாகிஸ்தான் மூலம் இலங்கைக்கு வருவதாக ஊகிக்கப்படுகிறது. அவை போதாது என்று ஈரானுக்கு இஸ்ரவேல் மூலம் அமெரிக்க ஆயுதங்கள் வழங்கப்பட்டது போல, இலங்கைக்கும் வழங்குவதற்கான முன்னேற்பாடு தான் இஸ்ரவேல் ஜனாதிபதியின் இலங்கை விஜயமோ?

இலங்கை இராணுவத்தினருக்கு இஸ்ரவேலியர்கள் பயிற்சி வழங்குகிறார்கள். புதிய ஆயுதங்களை இஸ்ரவேலியர்களே இயக்கித் தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதல்களையும் நடத்துகிறார்கள். அமெரிக்க ஆயுதங்கள் இஸ்ரவேல் மூலம் வரத் தொடங்கினால் ..?

அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த இலங்கையின் அமெரிக்க அணிசேரும் தன்மை கேள்விக்கு இடமானது. இந்தியா, ரஷ்யாவுடன் அதிகம் நெருக்கமாவதை சற்று அசைத்துப் பார்ப்பதற்கான ஒரு சவால் என்றும் இதனைக் கொள்ளலாம்.

கோர்பச்சேவ் ராஜீவ் பேச்சுக்களில் இவ் விவகாரம் அலசி ஆராயப்படாமல் போயிருக்குமா?

ஓய்வூதியம் பெறும் தினங்கள்

யாழ்ப்பாணம் தபால் நிலையம் மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாத ஓய்வூதியம் வழங்கும் திகதிகளை பிரதம தபால் அதிபர் அறிவித்திருக்கிறார்.

யாழ் கோட்டை முகாம் தபால் நிலையத்தில் வைத்து ஓய்வூதியம் வழங்கப்படும்.

திகதிகள் வருமாறு;

டிசம்பர் 2: அல்லைப்பிட்டி, ஆனைக் கோட்டை, ஆனைப்பந்தி, அரியாலை, அத்தியடிகொழும்புத்துறை,

குருநகர்.

டிசம்பர் 3: ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், கடைவீதி யாழ்ப்பாணம், நல்லூர், நல்லூர்க் கோவில், நாச்சிமார் கோவிலடி, சோனகர் தெரு, மண்டைதீவு.

டிசம்பர் 4: நாவாந்துறை, நீராவியடி, பிடாரி கோவிலடி, சண்டிலிப்பாய், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை.

தென் கொரியாவில் பலத்த மோதல்

40 பொலீஸார் பலி
600 ஆர்ப்பாட்டக்காரர் கைது

சியோல், நவ. 29

தென் கொரியா அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலீஸாரும் சியோலில் மோதிக் கொண்டதால் சுமார் 40 பொலீஸார் பலியாகினர். பலர் காயமடைந்தனர். 600க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

எழுபதாயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடுவதற்கு உத்

நதி பிரச்சினை

சியோல், நவ. 29

தென் கொரியாவும் வட கொரியாவும் பொதுவான நதியொன்றைப் பயன்படுத்துவதில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்.

இப் பேச்சுவார்த்தை இரு நாடுகளின் அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என தென்கொரியா விருப்

40 பொலீஸார் பலி
600 ஆர்ப்பாட்டக்காரர் கைது

தேசித்திருந்த இடம் ஒன்றையும் அவர்கள் தடை செய்திருந்தனர்.

புதுக் கொரிய ஜனநாயகக் கட்சி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அரசு தடைசெய்ய எடுத்த நடவடிக்கைகள் மக்க

நீர வேண்டும்

பம் தெரிவித்துள்ளது.

இந்த நதியின் குறுக்கே வடகொரியா சர்ச்சைக்குரிய அணை யொன்றைக் கட்ட தற்பொழுது நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அணைகட்டுவதை தவிர்த்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு தென் கொரியா கோரியுள்ளது: (ஒ)

மரண தண்டனை

தெஹ்ரான், நவ. 29

தென்கிழக்கு ஈரானில் போதைவஸ்து குற்றத்திற்குள்ளான ஐவருக்கு மரணதண்டனை நிறை வேற்றப்பட்டது.

இவர்களில் இருவர் ஆப்கானிஸ்தான் பிரசைகளாவர்.

இவர்கள் அனைவரும் மரணதண்டனை நிறை வேற்றும் குழுவினரால் விசாரணையின் பின் சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஒ)

காலை செய்திக்காக மரணமான மன்னர்

லண்டன், நவ. 29

காலை பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியை கைப்பற்றுவதற்காக 50 வருடங்களுக்கு முன்னர் மரணமான ஐந்தாவது ஜோர்ஜ் மன்னர் அவசரம் காட்டினார்.

இதனால் இயற்கை மரணத்தை தவிர்க்கும் முகமாக நோய் வசப்பட்டு மரணத்தை எதிர் நோக்கியிருந்த அவருக்கு மரணத்தை நெருங்கக் கூடிய மருந்து வகை ஊசிமூலம் ஏற்றப்பட்டது.

வழமையான சாவை அவர் தழுவியிருந்தால் மாலை தினசரிகள் தான் அவரது மரணச் செய்தியை முக்கியத்துவம் கொடுத்திருக்குமாம்.

அவரது மருத்துவர் எழுதிய வரலாற்றுத் தகவல்களில் இது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (ஒ)

உலகில்

ஆப்கான் பிரச்சினை தற்காலிகமானது

புதுடில்லி, நவ. 29

ஆப்கானிஸ்தான் அரசியல் பிரச்சினை தற்காலிகமானது. அதற்கு அரசியல் தீர்வு ஏற்படுத்துவதில் ரஷ்யா முழுமனதுடன் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு ரஷ்ய அதிபர் மிக்கையில் கோர்பச்சேவ் தனது நான்குநாள் இந்திய விஜயத்தை வெள்ளிக்கிழமை பூர்த்தி செய்யும் முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஆப்கன் அரசின் அழைப்பின் பெயரிலேயே ரஷ்யத் துருப்புகள் அங்கு சென்றுள்ளன. இதனால் தான் அகதிகள் நெருக்கடி தோன்றியது என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது.

சீனாவுடன் உறவுகளை ரஷ்யா வலுப்படுத்தி வருவதால், இந்தியா வுடன் தமது உறவு பாதிப்படையும் என்ற கருத்து அர்த்தமற்றது.

தமது இந்திய விஜயம் மிகுந்த பலனைத் தந்த துடன் பிரதமர் ராஜீவுடன் தனிப்பட்ட முறையில் நெருங்கிய உறவையும் பலப்படுத்தியுள்ளது.

இவ்வாறு கோர்பச்சேவ் தெரிவித்தார். (ஒ)

பத்திரிகை நிதானம் தேவை

மணிலா, நவ. 29

ஆசியாவில் பிலிப்பீன்ஸ் பத்திரிகைகளுக்கு மட்டுமே ஆகக் கூடுதலான சுதந்திரம் உண்டு. ஆனால் பத்திரிகையாளர்கள் தமது சுதந்திரத்தை நிதானமாகப் பயன்படுத்தவேண்டும்.

இவ்வாறு பிலிப்பின்ஸ் ஜனாதிபதி பத்திரிகையாளர் மாநாட்டில் எச்சரித்தார்.

பரபரப்பாக செய்திகளை வெளியிடுவது உதவா உணவைப் போன்றவை என அக்கியூனோ வர்ணித்தார். (ஒ)

என் பகுதியில் வேண்டாம்

வேறு பகுதிகளைத் தாக்குங்கள் என்றராம் பொலீஸ் அதிகாரி

அவர் மீதான வழக்கில் தகவல்

கொழும்பு, நவ. 30

எனதுபகுதியில் தாக்குதல்கள் நடத்த வேண்டாம்; வேறு பகுதியில் நடத்துங்கள் உங்களுக்கு அதற்கு பாதுகாப்புத் தருகின்றேன்.

வாழைச்சேனை பொலீஸ்நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி தவராஜதீபன் இரண்டுதீவிரவாதிகளிடம் மேற்கண்டவாறு கூறினார்.

இத்தகவலை அரச சட்டத்தரணி காந்திலால் குமாரசிறி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வெளியிட்டார்.

முன்னாள் இன்ஸ்பெக்டர் தவராஜதீபனுக்கு எதிரான வழக்கு விசாரணையின் ஆரம்ப உரையில் அரச சட்டத்தரணி இதனைத் தெரிவித்தார்.

செல்லையா கருணாகரன், சுந்தசாமி கமலநாதன் ஆகிய தீவிரவாதிகளுக்குப் புகலிடம் கொடுத்தது, அவர்கள் தீவிரவாதிகள் என்று தெரிந்து இருந்தும் தகவல் கொடுக்கத் தவறியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் திருதவராஜதீபன்மீது சுமத்தப்பட்டுள்ளன.

எதிரி தான் சுற்றவாளி என்று குறிப்பிட்டார்.

பொலீஸ்அதிகாரி என்ற முறையில் குற்றங்களைத் தடுக்கவேண்டிய எதிரி குற்றங்களைச் செய்யத் தூண்டுதலாக இருந்திருக்கிறார்.

எதிரியின் வீட்டுக்குச் சென்று இரண்டு தீவிரவாதிகள் ஆலோசனை நடத்தியிருக்கிறார்கள்.

வாகரை இராணுவத் தினரை கண்ணி வெடி வைத்துத் தாக்கிய பின்னரே இச்சந்திப்பு நடந்தது—

இப்படி அரச சட்டத் தரணி சொன்னார்.

மேல் விசாரணை ஜனவரி 8க்கு ஒத்திவைக்கப் பட்டது.

எதிரி சார்பில் சட்டத் தரணி ஆர். தம்பிரத்தினம், சட்டத்தரணிகள் சேவியர் சொன்னபால, ஆர். ருத்ரதாஸன், திருமதி என்.கணேசயோகன் திரு ஜே. ஏ. எம் சிஸில் ஆகியோருடன் ஆஜரானார். (இ-எ)

எரிச்சலூட்டும் ஜெபங்கள்!

"மற்ற பத்து பேரும் அதைக் கேட்டு அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள்" (மத் 20:24)

உன் ஜெபம் மற்றவர்களுக்கு பக்திவிருத்தியை உண்டாக்குகிறதாக இருக்கட்டும். மற்றவர்கள் விசுவாசம் பெருகும்படி ஜெபி. உன் உருக்கமான ஜெபம் உள்ளங்களை ஊன்றிக் கட்டியெழுப்பட்டும் சிலருக்கு ஜெபிக்க ஆரம்பிக்கத் தெரியும். ஆனால் முடிக்கத் தெரியாது.

நீண்ட ஜெபம் பண்ணி மற்றவர்களையெல்லாம்

சோர்ந்து போகப் பண்ணுவார்கள்.

இயேசுவிடத்தில் ஒரு தாய் வந்து தனது வேண்டுகோளை சமர்ப்பித்தாள். அந்த ஜெபத்தை இயேசு மட்டுமல்ல அவருடைய அத்தனை சீஷர்களும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவள் கேட்டாள், 'உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும்' என்றாள். (மத் 20:21)

எத்தனை சுய நலமான ஜெபம் இது. கிறிஸ்துவின் சிங்காசனத்தின் அருகே தன்பிள்ளைகள் மாத்திரம்தான் உட்கார்ந்திருக்க வேண்டும். வேறு யாருக்கும் இடமிருக்கக் கூடாது. இந்த

ஞானகதிர்

ஜெபத்தைக் கேட்டதும் மற்ற பத்து சீஷர்களும் எரிச்சலடைந்தார்கள்

அவர்கள் எரிச்சல் அந்த தாய்மீது மட்டுமல்ல, அந்த இரண்டு சீஷர்கள் மேலும் எழுந்தது. அந்த ஜெபத்தின் மூலம் சீஷர்குழுவுக்குள்ளேயே ஒரு பிளவை ஏற்படுத்தி விட்டாள் அந்தத் தாய்!

தேவபிள்ளையே, ஜெபிக்கக் கற்றுக்கொள். ஞானமாக ஜெபி. ஒரு மனதின் ஐக்கியத்தை ஏற்படுத்தும்படி ஜெபி. உன் ஜெபம் உள்ளங்களை ஒன்று சேர்க்கட்டும்.

'ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்தது போல நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும். (லூக் 11:1) (இ)

காணிகையளிப்பு

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய விஸ்தரிப்பிற்கெனச் சுவீகரிக்கப்பட்ட சுரந்தகப்பற்று என்னும் ஒரு றாட் 30 பேர்ச் பரப்பளவு கொண்ட காணி கடந்த புதன்கிழமை மாலை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

பொன்மொழி

குறள்:

நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்
நோய் செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

பொருள்:

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வன; ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புகின்றவர் பிறர்க்குத் துன்பம் செய்யார்

கோயிலில் கடவுளை

காணமுடியாதோர் பஜனைவெளியில் காணலாம் --வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ 30

கோயிலில் கடவுளைக் காண முடியாதவர்கள் இந்த பஜனைவெளியில் காணலாம்,

பஜனைவெளி வெளியீட்டு விழாவில் ஆத்ம ஜோதி முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஆத்மஜோதி அவர்கள் பஜனைவெளியை வெளியிட்டு வைத்து மேலும் பேசியதாவது:-

இன்று துப்பறியும் நாவல்கள், காதல் கதைகள், கவிதைகள் என்பவற்றைத் தொகுத்து வெளியிட்டு விழா நடத்தி வரும் காலத்தில் பயன்தரும் பஜனைவெளியை சமாதான நீதவானும் சைவச் சிறுவர் இல்ல ஆரம்பகர்த்தாவுமான திரு. ஆறுமுகம் கந்தையா வெளியிடுவது குறித்து தமிழ் மக்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியுற்று அவரை வாழ்த்தவேண்டும்.

வெளியீட்டாளரான அவர் தாமாகவே தொகுத்து வெளியிட்ட இந்நூல் காலத்தால் அழிக்க முடியாத சிறந்த தொகுப்பாகும்.

இப்படி அவர்கூறினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதம விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி நிருச்சிற்றம்பலம்பேசுகையில் கடவுளைக்காணவிரும்புபவர்கள் ஆலயங்களில் காணமுடியாவிட்டால் இப் பஜனைவெளியை படித்தால் காண முடியும்.

இதுவரை பல பஜனைவெளிகள் வெளிவந்த போதும் இன்று வெளியிடப்பட்ட பஜனைவெளி காலத்தால் அழியாத சிறந்த தொகுப்பாகும் என்றார்.

திருக்கேதீச்சர திருப்பணிச் சபைத் தலைவரும் பரமேஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபருமான திரு. மு. ஞானப்பிரகாசம் பேசுகையில் எங்கள் சைவ மக்களுக்காக வாழ்ந்து சென்றவர்களுள் சேர். பொன். இராமநாதன் பல இலட்சம்பெறுமதியான சொத்துக்களைச் சைவத்தின் வளர்ச்சிக்காக தரும சாதனம் செய்தார்.

அதே போன்று அமரர் தம்பு வில்வப்பா ஈழத்தின் பாடல் பெற்ற திருக்கேதீச்சர தலத்திற்கு 35 இலட்சம் ரூபாவை தரும சாதனம் செய்தார்.

இந்தச் சொத்துக்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனவா என்பதை அனைவரும் உற்று நோக்க வேண்டும் என்றார்.

நல்லை ஆதீன பரமாசாரிய சுவாமிகள் தலை (4 ஆம் பக்கம் பார்க்க)

கால்நடை நோய் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 30

கால் நடைகளைத் தாக்கும் நோய்களும் தடுப்பும் என்னும் பொருள் பற்றி யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் நடத்தும் ஒரு நாள் கருத்தரங்கு அடுத்த மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

கருத்தரங்கு யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர் திரு.சி. ஜெயரத்தினம் தலைமை வகிப்பார்.

பன்றி, முயல் விலங்குகளைத் தாக்கும் நோய்களும் – தடுப்பும் என்னும் பொருள் பற்றி யாழ் மிருக வைத்தியர் டாக்டர் ரி. வர்ணலிங்கம், —

'மாடு, ஆடு ஆகிய வற்றைத் தாக்கும் நோய்களும் தடுப்பும்' என்னும் பொருள் பற்றி தெல்லிப்பழை மிருக வைத்தியர் டாக்டர் (திருமதி) எஸ் தனபால சிங்கம், —

''பறவை இனங்களின் (கோழி, தாரா) நோயியல்'' என்னும் பொருள் பற்றி பருத்தித்துறை மிருக வைத்தியர் டாக்டர் எம். தங்கராஜா ஆகியோர் உரை நிகழ்த்துவர். (இ-எ)

பூஸாவில் வாடும்

1,500 திருமலை இளைஞர்

திருகோணமலை, நவ. 30

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 1,500 தமிழ் இளைஞர்கள் தற்சமயம் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதபடையினர் திருமலை மாவட்டத்தில் பல தடவைகள் நடத்திய தேடுதல் நடவடிக்கைகளில் கைதானவர்களே இப்படி பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என திருமலை பிரசைகள் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கு வழங்குவதற்காக உறவினர்களினால் கையளிக்கப்பட்ட 1,500 உடுதுணிப் பார்சல்கள் பிரசைகள் குழு வினரால் பூஸாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை கடந்த வாரமும் 52 தமிழ் இளைஞர்கள் திருமலையிலிருந்து பூஸா முகாமுக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

இவர்கள் பாலையூற்று, செல்வநாயகபுரம், அன்புவழிபுரம் பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலின்போது கைது செய்யப்பட்டவர்கள். (உ-எ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. D. P. M. Parts I & II
A A. T. All Stages
I. A. B. All Stages
Commencement: 6 - 12 - 86

If you can find a better Course joint it.

Cantabia Institute
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

உதயன்

30 · 11 · 1986 ஞாயிற்றுக்கிழமை

I C M A (New Syllabus)
Stage - I Rs 800-00
Stage - II Rs 1000-00
(All subject will be taught)
Commencement: 6-12-86
Dedicated lectures Safe place
Reasonable fees
Join the leaders

Cantabia Institute
(shoot of Oxonia, Colombo)
21, Main Street. Jaffna.
T'Phone: 24201

முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக நேற்றுப் பிரகடனம்

கொழும்பு, நவ. 30 சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் அரசியல் கட்சியாக நேற்றுப் பிரகடனப் படுத்தப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆறாவது வருடாந்த மாநாட்டில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

மாநாட்டுக்குகாங்கிரஸ் தலைவர் சட்டத் தரணி எம். எச். எம். அஷ்ரப் தலைமை வகித்தார்.

காங்கிரஸை, முஸ்லிம் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற பிரேரணையை சட்டத்தரணி ஏ. பி. எம். முகைதீன் முன்மொழித்தார். இவர் வாழைச்சேனையைச் சேர்ந்தவர்.

மருதமுனை வாசியான மௌலானா அமில் அன்சார் பிரேரணையை வழிமொழிந்தார்.

கொழும்புத் தெமட்டக்கொட பாஷாவிலாவில் நடந்த இம்மாநாட்டில் 500 க்கு மேற்பட்ட முஸ்லிம் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

யாழ் பல்கலைக்கழக அரபு நாகரிகத் துறை விரிவுரையாளர் அல் ஹாஜ் மௌலவி கே. எம். எச். காலிதீனும் கலந்துகொண்டார்.

(உ-ஏ-14)

மட்டக்களப்பில் போராளிகளை தேடி அழிக்க படைகள் முஸ்தீபு

மட்டக்களப்பு, நவ. 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் போராளிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தும்படி பாதுகாப்புப் படையினருக்கு மேலிடம் உத்தரவிட்டிருப்பதாக அறியப்படுகிறது.

நேற்று மட்டக்களப்பு விமானநிலையத்துக்கு இரண்டு பொம்மர் விமானங்கள் வந்தன.

படையினரின் 'தேடி, அழிக்கும்' நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காகவே இந்த பொம்மர் விமானங்கள் அனுப்பப் பட்டன என்று தெரிய வருகின்றது.

போராளிகளின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கருதும் கொக்கட்டிச்சோலை, படுவான்கரை, வடமுனை, வாகனேரி ஆகிய பகுதிகளில்தான் இத்தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

(உ-ஏ-21)

மல்லாகம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்தியத்திற்கு கருவித்து சபையின் சேவையை விஸ்தரிக்க தாம் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மல்லாகம் வேலைத்தலம் முன்னர் இயங்கி வந்தது. பின்னர் அங்கிருந்த உதிரிப்பாகங்களும் பொருள்களும் இனந் தெரியாதோரால் கொள்ளையடிக்கப்பட்டதை யடுத்து மூடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-10)

பயங்கரவாத..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் சொன்னார்.

எதிரியான கணேசமூர்த்தரத்துக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

எதிரி தரப்பில் சட்டத்தரணி சிவா இராஜரத்தினம், சட்டத்தரணி ஏ. இராஜசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

(அ)

கோயிலில்---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக பருத்தித்துறை இராமகிருஷ்ண சேவாச்சிரம அதிபர் திரு. சித்ரூபானந்தா கலந்து சிறப்பித்தார்கள்.

(இ-74)

கிராமசேவகரின்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

கிராம சேவகர் வருமுன்னரே கிராம சேவகரின் வீட்டுக்குள் பதுங்கியிருந்த சிப்பாய்கள் கிராமசேவகரைப் பிடித்துக்கொண்டனர்.

கிராமசேவகரின் வீட்டைச் சல்லடை போட்டு அறை அறையாகத் தேடுதல் நடத்தினர்.

பின்பு கிராம சேவகரின் ஹொண்டா மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் தமது பாதுகாப்புக்காக கிராம சேவகரையும் அவரது குடும்பத்தவரையும் அழைத்துச் சென்று பின்பு விடுவித்தனர்.

தமது மோட்டார் சைக்கிள் பறிபோனது குறித்து வல்வெட்டித்துறை பிரசைகள் குழுச் செயலாளர் திரு. வி. விஜயரத்தினத்திடம் கிராம சேவகர் புகார் செய்துள்ளார்.

(இ-160)

தமிழர் தாயகம் :

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றிவியூ முன்னாள் ஆசிரியர், திரு. எஸ். சிவநாயகம்ஆகியோர் இலங்கைத் தமிழர் சார்பில் கலந்து கொண்டனர். பிரபல தென்னிந்தியப் பிரமுகர் திரு. எம். திருஷ்ணசாமி இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார். (அ-ஐ-எ)

வாங்கவும் விற்கவும்

எப்பொருள் களானாலும் புதியனவைகளானாலும் – பழையவைகளானாலும் வாங்கவும்/விற்கவும் இனமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும் – பழையனவுமாகிய நானாவித பொருள்கள் மலிவு விற்பனைக்கு இருக்கின்றன. லக்கிபெனிபிட் கொம்பனி லிமிட்டட் பொதுச் சந்தை (சந்திக்கருகாமையில்) கோப்பாய்.

விசா ஒழுங்குகள்

Australia அவுஸ்திரேலியா, நோர்வே, சுவிடன் விசா விரைவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு:-
S. நடராசா,
K. K. S. வீதி,
கொக்குவில் சந்தி.

உளவள ஆலோசனை நிலையம்

யாழ் நகரில் ஓர் புதிய உதயம்!

உங்கள் மனக் கவலைகளை விட்டொழியுங்கள்!
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும் . . . . .

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற ஆலோசகர்கள்
உங்கள் பிரச்சினைகளுக்கு பரிவாயும்
அந்தரங்கமாயும் ஆலோசனைகளை
வழங்குகின்றார்கள்

ஆலோசனை நேரங்கள்: பிற்பகல்
வியாழன் 2-30 மணிமுதல் 5-30 மணி வரை
ஞாயிறு 2-30 .. 5-30 மணி வரை

மற்றைய நாட்களில் பதிவுசெய்தல் மட்டுமே
காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணி வரை
(வெள்ளி விடுமுறை தினம்)

நாடுங்கள்:-

உளவள ஆலோசனை நிலையம்
-19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, :: யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:
ஜோ. எகட்டன் செனித் ADS.
யாழ்ப்பாணம்.

யாழ்-கொழும்பு-யாழ்
போக்குவரத்துச் சேவை
Glass House Transporters
கிளாஸ் ஹவுஸ் ட்ரான்ஸ்போர்ட்டர்ஸ்

தனியாருடைய வெளிநாட்டுப் பொருட்களையும், தனியார் ஸ்தாபனங்கள், அரசாங்க அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்களின் பொருட்களையும் பாதுகாப்பாகவும் மிக துரித கெதியிலும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் கொண்டு செல்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்,

கிளாஸ் ஹவுஸ்
ட்ரான்ஸ்போர்ட்டர்ஸ்
(GLASS HOUSE TRANSPORTERS)
63, டாம் வீதி, கொழும்பு - 12.
தொலைபேசி: 34412.

யாழ்ப்பாணம்:
182, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22101

இதோ! அறிமுகப்படுத்துகின்றோம்.
1987 கலண்டர்கள்

எல்லா வகையான அளவுகளில் நீங்கள் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயர், விலாசம் இலவசமாக அச்சிட்டுப் பெறலாம்.

விவரம் அறிய
தொடர்பு கொள்ளுங்கள்:-

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19 / 3 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இது மட்டுமல்ல சகலவிதமான டிசைன்கள், Cut Outs, விளம்பர அறிவித்தல்கள், சஞ்சிகைகள் அல்லது மலர்களுக்கு அட்டைப்பட டிசைன்கள் திருமண அழைப்பிதழ்கள் வியூ காட் டிசைன்கள், விளம்பர போஸ்டர்கள், Visiting Cards டிசைன்கள், உங்கள் உற்பத்திப் பொருட்களின் கவர்ச்சிப் பெட்டிகள், சுற்றுத் தாள்கள், டிசைன்கள் எம்மை அணுகுங்கள். எமது கலைப்பிரிவு பொறுப்பாளர் திரு. பாலாஜி B.Com. அவர்கள் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவார்.

மற்றவர்கள் உறுதியளிப்பதை நாங்கள் முடித்து வைக்கின்றோம்.

செனித்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்
★ சவூதி அரேபியா ★ சிங்கப்பூர்
★ குவைத் ★ ஜேர்மனி ★ லண்டன் U.K.

1. சவூதி அரேபியாவுக்கு (Open Visa) தொழில் வாய்ப்புடன் உடனடி பிரயாணம் மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
2. சிங்கப்பூர் தொழில் வாய்ப்புடன் செல்லவிரும்பும் ஆண்களும் பெண்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.
3. குவைத் குவைத் டிறைவிங் லிசென்ஸ் உள்ளவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
4. ஜேர்மனி - லண்டன் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

(குறிப்பிட்ட வெற்றிடங்கள் மட்டும் உண்டு)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS
றை ஸ்ரார் றவல்ஸ்
No. 6, நவீன சந்தை மேல்மாடி.
தொலைபேசி இல: 23831

மு.கு: யாழ்நகர் நிலைமை சீரற்று, எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ் வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.
71, குருசோ வீதி, (சுண்டுக்குளி) யாழ்ப்பாணம்.
வே. சுகராஜா, மயிலியற்புலம்
கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
N. தயாளன், மயிலணி வடக்கு, சுண்ணாகம்.

செனித்

வழங்கும் புதுமைப் பரிசு!

வாசகர்களே!

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு வாசகர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்
உங்கள் உறவினர்கள், நண்பர்கள், மற்றும் நீங்கள் நேசிப்பவர்களுக்கு
உதயன், மற்றும் உள்ளூர்ப் பத்திரிகைகள் மூலம் இலவசமாகத் தெரிவியுங்கள்

நீங்கள் செய்ய வேண்டியது பின்வருமாறு:-

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களை, எந்தப் பத்திரிகையில் தெரிவிக்க வேண்டும் என்பதையும், யாருக்கு தெரிவிக்க வேண்டும் என்பதையும் தெளிவாகவும், அழகாகவும், கீழ்வரும் கூப்பனில் எழுதி 1986-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20-ஆம் திகதிக்கு முன்னும் (நத்தார் வாழ்த்துக்களையும்) புதுவருட வாழ்த்துக்களை 1986-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னரும் தைப்பொங்கல் வாழ்த்துக்களை 1987-ஆம் ஆண்டு தை மாதம் 10-ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பவேண்டும்.

ஆனால் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள் வாழ்த்துக்களை மூவருக்கு மட்டுமே தெரிவிக்கலாம். அத்துடன் (3) மூன்று தோலகட்டி நெல்லிரச லேபல்களை (நெல்லிரச போத்தலில் உள்ள லேபல்) அத்துடன் பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனை அனுப்பினால் மட்டுமே வாழ்த்துக்கள் பிரசுரமாகும். ஒருவர் எத்தனை பேரையும் வாழ்த்தலாம். ஆனால் (3) மூன்று நெல்லிரச லேபல்களுக்கு மூவர் (பெயர், விலாசம்) மட்டுமே வாழ்த்துக்குரியவர், உதாரணத்திற்கு 15(பதினைந்து) பேர்களை வாழ்த்த வேண்டுமாயின் 15 நெல்லிரச லேபல்களை கூப்பனுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஆகவே உங்கள் லேபல்களைச் சேகரித்து பெயர் முகவரியுடன் உடனே அனுப்புங்கள்.

செனித் வாழ்த்துக் கூப்பன்

பெயர்: _____

விலாசம்: _____

_____

வாழ்த்துக்குரியவரின் பெயர், முகவரி

பெயர்: _____

விலாசம்: _____

_____

வாழ்த்து இடம் பெறும் பத்திரிகையின் பெயர்: _____

உதயன் / சுடரொளி / ஈழமுரசு

_____
கையொப்பம்.
(தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக)

அனுப்ப வேண்டிய முகவரி:-

செனித் புதுமை வாழ்த்துக்கள்
19 / 3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

செனித் புதுமையின் உறைவிடம்
விளம்பர வடிவமைப்பு: ஜோ. எகட்டன், செனித், ADS.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிதாபனத்தாராதி அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 30-11-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane. Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number Q. J. 6 On 86. T'PhoneNo. 24805, 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org